சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண் :OS:115/2020

2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ராதாகிருஷ்ணன் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

15.04.2024

1) எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 30 வருடங்களாகிவிட்டது. நான் பொய்சொல்கிறேன் என்றும் எனக்கு 1980 ஆண்டில் திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. நான் என் குடும்பத்தினரை எதிர்த்து காதல் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் குடும்பத்தை எதிர்த்து காதல் திருமணம் செய்து கொண்டேன் என்றும் அதனால் என் தந்தை பூர்வீக சொத்துக்களை பொறுத்து 1980 ஆண்டே பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால்ச ரியல்ல. நான் திருமணத்திற்கு பிறகு தனிக்குடித்தனமாக இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான்கு வருடங்கள் கழித்து தனிக்குடித்தனம் சென்றேன். நான் திருமணம் முடிந்த நாளிலிருந்தே கூட்டு குடும்பத்தை விட்டு தனிக்குடித்தனமாக இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

2) பாகம் பிரிக்கப்பட்டதன் அடிப்படையில் 3ம் பிரதிவாதியின் கணவரான

உலகநாதன் என்பவருக்கு தாவா 6 முதல் 13 லக்க சொத்துக்கள் கிடைக்க பெற்றனர் என்றால் சரியல்ல. அதன் பிரகாரம் உலகநாதன் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.256/2 சொத்தினை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதன் பழைய சர்வே எண்.119/5 என்றால் அது எனக்கு தெரியாது. புல எண்,256/2 சொத்தினை 3ம் பிரதிவாதி மற்றும் அவரின் மக்களிடமிருந்து 30.10.2014 அன்று நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது 30.10.2014 அந்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். 3**0.10.2014 கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ1 ஆகும்.** மேற்படி சொத்து என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை விற்றுவிட்டேன். பி.வா.சா.ஆ1 ஆவணத்தின் லதா என்பவர் அந்த ஆவணத்தில் கண்ட சொத்து அவர் கணவர் உலகநாதனுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அவர் பூர்வீக சொத்து அல்ல.

3) பி.வா.சா.ஆ1 ஆவணத்தில் கண்ட சொத்து ஆறுமுகதேவரின் பூர்வீக சொத்தில் பாகம் பிரிக்கப்பட்டதில் உலகநாதனுக்கு பாகத்தில் கிடைத்து அவர் பெயரில் பட்டா ஏற்பட்ட சொத்து என்றால் சரியல்ல. என் அம்மாவும் அப்பாவும் தங்களது கடைசி காலத்தில் இறக்கும்வரை உலகநாதனுடன் இருந்தார்கள் என்றால் இல்லை தனியாக இருந்தார்கள். கடைசிகாலம் வரை என் தாய்தந்தையர் உலகநாதனுடன் தான் இருந்தார்கள் என்றும் அதற்கான ஆவணங்கள் உள்ளது என்றால் சரியல்ல. தாவா A செட்டியூல் 15 லக்க சொத்தில் உலகநாதனின் மனைவி மற்றும் மக்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் அவர்கள் மதுரையில் இருக்கிறார்கள் இங்கு இல்லை. 15 லக்க சொத்தில் வீடு தான் உள்ளது என்றால் இருக்கலாம். 15 லக்க சொத்தில் உள்ள வீடு உலகநாதன் வங்கியில் கடன் வாங்கி வீடு கட்டினார் என்றால் அவரது பெயரில் கடன் வாங்கி நாங்கள் தான் கட்டினோம்.

4) 30.10.2014 அன்று நான் ஒரு விடுதலை ஆவணத்தை 3ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். அதனை கடன் வாங்குவதற்காக எழுதி கொடுத்தேன். நான் தாவா சொத்தை பொறுத்து தான் மேற்படி விடுதலை ஆவணத்தை எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா 14லக்க சொத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி தாவா 14லக்க சொத்து அவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதி மரகதம் தாவா பி செட்டியூல் சொத்துக்களை அனைத்தையும் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா பி செட்டியூல் சொத்துக்கள் 2ம் பிரதிவாதிக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்றும் 2ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. ஆறுமுகதேவருக்கு பாத்தியப்பட்ட புல எண்.117/2 சொத்து உள்ளது என்றும் நான் அதனை சேர்க்கவில்லை என்றால் சரிதான். புல எண்.117/2ன் சொத்தினை என்னுடைய துண்டுதல்பேரில் 6ம்பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால்ச ரியல்ல.

5) புல எண்.117/2 சொத்தினை 1ம் பிரதிவாதி என்னிடம் கேட்டு சண்டை போட்டு வருகிறார் என்றால் சரியல்ல. ஆறுமுகதேவரும் வீராயி அம்மாளும் உயிருடன் இருந்தகாலத்திலேயே 1980 ஆண்டு குடும்ப ஏற்பாட்டின் அடிப்படையில் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அந்த பாகபிரிவினை அடிப்படையில் தாவா சொத்துக்கள் உலகநாதனுக்கு ஒதுக்கப்பட்டு உலகநாதன் பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வந்தார் என்றும் அவர் இறந்தபிறகு அவர் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. உலகநாதனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை 3 மற்றும் 4, 5 பிரதிவாதிகள் சட்ட காலத்திற்கு மேலாக தனித்து அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரிந்தும் நான் மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி

செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.